

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு ஈரோடு வடக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அனைத்துக் கட்சி நிர்வாகிகள் செயல்வீரர்கள் கூட்டம் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ் தலைமையில் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சு.முத்துசாமி கலந்து கொண்டு தேர்தல் கள பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் கழக விவசாய அணி இணை செயலாளர் குறிஞ்சி என்.சிவக்குமார், ஈரோடு தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் கள்ளக்குறிச்சி சுங்கச்சாவடி அருகே மாடூர் ஏ.என்.பி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல் வாழ்த்துக்கள் தெரிவித்து,தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்பட 1000க்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசு பொருட்கள் வழங்கினார். இந்த விழாவில் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ மற்றும் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, வடக்கு மாவட்ட கழக அவை தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ தே.மலையரசன் எம்.பி. தொகுதி பொறுப்பாளர்கள் ச.அ.பெருநற் கிள்ளி, வ.அன்பழகன், தாமரைச்செல்வன்,ஸ்ரீதர் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை இடைத்தேர்தலில் தி.மு.க.விற்கு ஆதரவு!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

*சென்னை, ஜன. 14 -*

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஈரோடு கிழக்கு சட்டப் பேரவை இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்ற கழக தோழமைக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் அவர்களின் வெற்றிக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி களப்பணியாற்றும். கடந்த மூன்று ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில்



முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அயராத உழைப்பால் உருவாகிய அற்புதமான திட்டங்கள் வி.சிசந்திர குமார் அவர்களை அபரீதமான வெற்றிக்கு வித்திடும் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல் மிக விரைவில் நடைபெற உள்ள சூழலில் நடைபெற இருக்கிற இந்த ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை இடைத்தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடாமல் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட ஒத்துழைப்பு நல்கிய காங்கிரஸ் கட்சியின் செயல் வரவேற்கத்தக்க ஒன்றாகும். காரணம், இந்த தேர்தலில் மதவாத சக்திகள் போட்டியிட்டால் அவர்களை வேரோடு வீழ்த்திட வேண்டும். அதற்கு திராவிட முன்னேற்ற கழகம் போட்டியிடுவது அவசியம் ஆகும். ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தேர்தலின் முடிவு என்பது அடுத்த நடைபெற இருக்கிற சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கான ஒரு முன்னறிவிப்பாகும். எனவே இந்த இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கடும் களப்பணியாற்றும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கும்பகோணம் மாநகராட்சியில் புதிதாக பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்திடுக!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் க.அன்பழகன் வலியுறுத்தல்!

*சென்னை, ஜன.14 -*

சட்டப்பேரவையில் கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் க.அன்பழகன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு :

க.அன்பழகன்: கும்பகோணம் மாநகராட்சியில், 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாதாள சாக்கடை 60 ஆண்டுகளுக்கு பிறகு பழுதடைந்திருக்கிற இந்த சூழ்நிலையில், இன்றைக்கு கும்பகோணம் மாநகராட்சி கொஞ்சம் வார்டுகள் விஸ்தரிக்கப்பட்டு, தாராசுரம் சேர்க்கப்பட்டதற்கு பிறகு, பல இடங்களில் சாலைகளில் சாக்கடை தண்ணீரும், குடிநீரும் கலந்து செல்லும் அவலநிலை இருக்கிறது. அமைச்சர் அவர்களிடம் ரூ.58



கோடிக்கு புதிதாக பாதாள சாக்கடை அமைப்பதற்காகவும், சரிசெய்வதற்காகவும் ஒரு மதிப்பீடு அனுப்பப்பட்டிருக்கிறது.

அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் அணுகி விரைவாக நிதியாணைப் பெற்று, கும்பகோணம் மாநகராட்சி மக்களுடைய அவலநிலையை தீர்ப்பாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என்.நேரு: நம்முடைய உறுப்பினர் அன்பழகன் அவர்கள் சொல்கிறபோது கும்பகோணம் மாநகராட்சி மக்களுடைய அவலநிலை என்று சொல்கிறார். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேலாக கும்பகோணம் நகராட்சிக்கு பணம் தரப்பட்டிருக்கிறது. வாய்க்காலை சரி செய்வதற்கான திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மழை நீர் வடிகால் வாய்க்கால்கள் கட்டுவதற்கு கொஞ்சம் இல்லாமல் முந்தைய ஆண்டுதான் தரப்பட்டது. இந்த ஆண்டு ஒதுக்கப்படுகின்றபோது மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டப்பட்டு, சாலைகளின் இரண்டு பக்கமும் retaining wall இருந்தால் சாலைகள் அதிகமாக பழுதுபடாது, நீண்ட காலம் வரும் என்ற காரணத்தால், அந்தத் திட்டத்தை முன்னுரிமை தந்து இந்த ஆண்டு செய்யச் சொல்லி முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அவலநிலை இல்லை. அது நல்ல முறையில் இருக்கிறது. மேலும் நல்ல முறையில் உருவாக்குவதற்கு உறுப்பினர் அவர்கள் சொன்னதை எடுத்துக்கொள்ளப்படும். பாதாள சாக்கடைத் திட்டம் பற்றி சொல்கிறார். பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுகிறபோது அதை தோண்டி மீண்டும் அதைக் கொண்டு வருவதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகும். அவர் மறுபடியும் அதை சொல்வார். அந்தத் திட்டத்தை விரைவில் தொடங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் ஒன்றியம் அலங்கியம் ஊராட்சியில் நடைபெற்ற மாநில அளவிலான கைப்பந்து போட்டியை மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் துவக்கி வைத்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், முரசொலி மாறன் அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் சமத்துவப் பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் மாநகர செயலாளர்கள் டி. கே.டி.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், வடக்கு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ராம்குட்டி (எ) ராமமூர்த்தி உள்பட மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாட்டம்!

## மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் தீர்மானம்! எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

*சேலம், ஜன. 14 -*

சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்னதுரை, மாவட்ட பொருளாளர் ஆர்.வி. ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி மண்டல பொறுப்பாளர் டாக்டர் தருண், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், சோமசுந்தரம், தமிழ்செல்வன், சந்திரமோகன் ,சங்கர், கோபால், ரேகா பிரியதர்ஷினி, மனோகரன், ராஜா, சார்பு அணி நிர்வாகிகள் ரமேஷ், செல்வமணி, தனசேகரன், சிவராமன் , நல்லம்மாள், நகர செயலாளர்கள் வேல் முருகன், பாலசுப்பிரமணியம், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், உமா சங்கர், வெண்ணிலா சேகர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், சித்தார்த்தன், அழகு வேல்,மணி, பாலமுருகன், பேரூர் செயலாளர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

பெரும் புலவரும், தனித் தமிழ் இயக்கத்தை தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில், ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள், 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி, தமிழர்களுக்கென்று ஒரு தனி ஆண்டு தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடராண்டு ஒன்றினைப் பின்பற்றுவதென்றும், அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வதென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு.31 என்றும் முடிவெடுத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா மறைவுக்கு பின் 1969ம் ஆண்டு தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாள் குறிப்பிலும், 1972 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார்கள்.

‘திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை என்பதால், தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என்று அறிவித்து நடைமுறைப்படுத்திட முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அரசு முடிவுசெய்து” 23.01.2008



அன்று தமிழகச் சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க 01.02.2008 அன்று சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் திங்களான தைத் திங்கள் முதல் நாளானது தமிழ்ப்புத்தாண்டு நாளாகக் கொண்டாடப்படுதல் வேண்டுமெனவும்; தமிழ் ஆண்டானது தமிழ்த்திங்களான தைத் திங்கள் முதலாம் நாளன்று தொடங்கி தமிழ்த் திங்களான மார்கழித் திங்கள் கடைசி நாளுடன் முடிவடைதல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டு; 2009 ஆம் ஆண்டு முதல் தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப்புத்தாண்டு தொடங்கும் நாளெனத் தமிழக மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொன்றுதொட்டு தமிழர்களாகிய நாம் கொண்டாடி மகிழும் பொ உழவுத் தொழிலுக்கு வந்தனம் கூறும் உன்னதத் திருநாள்.

“கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முந்தோன்றி மூத்தக்குடி” எனப் பாராட்டப்பட்ட பழமைச் சிறப்பு வாய்ந்த தமிழினம், இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து இரவென்றும் பகலென்றும் பாராது பாடுபட்டு உயிர்களை உள்நின்று உடற்றும் பசிக் கொடுமயைப் போக்கிட உலகில் உள்ள உயிர்கெல்லாம் உணவு வழங்கும் சிறப்பான தொழில் செய்யும் உழவர்களின் வெற்றியைக் கொண்டாடும் பொன்னாளாக பொங்கல் திருநாளைக் கொண்டாடி வருகிறது.

சங்க காலத் தமிழர்கள் உழவுத் தொழிலையும், ஊரார்க்கு உண்டி வழங்கும் உழவரையும் சிறப்பாகப் போற்றினர். உழுது பயிரிட்டு விளைந்த நெல் மணிகளை வீடு சேர்த்த உழவன் அதன் பயனை நுகரும் பொழுது நன்றியுரைத்துக் கொண்டாடும் திருநாள் பொங்கல் திருநாள்! இன்று நாட்டில் கொண்டாடப்படும் பண்டிகைகள் பல. ஆரியக் கற்பனை கலாச்சாரப் பண்டிகைகளாக இருக்கும் நிலையில் பொங்கல் திருநாள் மட்டுமே தமிழருக்கு உரிய பொன்னாள். தந்தை பெரியார் அவர்கள் போற்றிய நன்னாள். பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழரெல்லாம் ஒன்றுகூடி பொங்கல் பெருநாளைக் கொண்டாடுவோம்’

என்று அறைகூவல் செய்து கொண்டாடிய நாள். அவர்கள் வழிவந்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பொங்கல் திருநாளோடு, தமிழ்ப் புத்தாண் டையும் கொண்டாடிட நமக்கு வழி செய்துள்ளார்கள்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த இந்த தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள தலைவாசல் (மத்திய, வடக்கு, தெற்கு), கெங்கவல்லி, ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம்(மத்திய, வடக்கு, தெற்கு), வாழப்பாடி (வடக்கு தெற்கு), அயோத்தியாப்பட்டணம் (வடக்கு, தெற்கு), ஏற்காடு, பனமரத்துப்பட்டி, சேலம், வீரபாண்டி ஆகிய ஒன்றிய கழகங்கள் சார்பாகவும், ஆத்தூர், நரசிங்கபுரம், ஆகிய நகர கழகங்கள் சார்பாகவும், ஆட்டையாம்பட்டி, இளம்பிள்ளை, மல்லூர், பனமரத்துப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், பேளூர், வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர். கீரிப்பட்டி, தம்மம்பட்டி, கெங்கவல்லி, தெடாவூர், செந்தராப்பட்டி, வீரகனூர் ஆகிய பேரூர் கழகங்கள் சார்பாகவும், ஊராட்சிகள் சார்பாகவும் தோரணங்கள் அமைத்து இருவண்ணக் கொடியேற்றி, சாதிமத பேதமின்றிச் சமத்துவப் பொங்கல் வைத்து இனிப்புகள் வழங்கிட வேண்டும்.

இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் சிறப்பாக செய்திட வேண்டும். எனக் சேலம் கிழக்கு மாவட்டம் கேட்டுக் கொள்கிறது.

வணங்குவோம் சூரியனை வாழ்த்துவோம் உழவரை மண் செழிக்கட்டும் மக்கள் மகிழட்டும் !! என்ற கழக தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், தளபதியார் அவர்கள் வாழ்த்துக்களோடு அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள் . இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டது.

சேலம் கிழக்கு மாவட்ட வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்னதுரை, மாவட்ட பொருளாளர் ஆர்.வி. ஸ்ரீராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி மண்டல பொறுப்பாளர் டாக்டர் தருண், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், சோமசுந்தரம், தமிழ்செல்வன், சந்திரமோகன் ,சங்கர், கோபால், ரேகா பிரியதர்ஷினி, மனோகரன், ராஜா, சார்பு அணி நிர்வாகிகள் ரமேஷ், செல்வமணி, தனசேகரன், சிவராமன் , நல்லம்மாள், நகர செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியம், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், உமா சங்கர், வெண்ணிலா சேகர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், சித்தார்த்தன், அழகுவேல்,மணி, பாலமுருகன், பேரூர் செயலாளர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழா விளையாட்டு போட்டிகளில், வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார். அருகில் மேயர் சத்யா உள்ளார்.